www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O (QD / 79 / News / 94)




# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 8 | 01 வைகாசி 1994 | விலை: ரூபா ஐந்து


## கிழக்கிலிருந்து இராணுவம் வடக்கிற்கு நகர்வு!

## 500கோடி ரூபா பெறுமதியான டாங்கிகள், ஏவுகணைகள் குவிப்பு!!

## வடக்கில் நிலைகொள்ளும் இராணுவத்தின் தொகை ஒருலட்சமாக உயர்வு!!!

# மாபெரும் தாக்குதலுக்கு முஸ்தீபு!!!!

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் படி ஐ.தே.க ஆட்சியின் இறுதி ஆண்டு 1994 எனலாம். 1977 இல் தமிழ் மக்கள் மீது இன வன்முறையைக் கட்டவிழ்த்து பெரும் இன அழிவுகளை ஏற்படுத்தியே இவ் ஆட்சி ஆரம்பித்தது.

இப்போது தமது ஆட்சி ஆட்டம்காணும் கட்டத்தில் தமிழர் வாழ்வுக்குச் சாவுமணி அடிக்கக் கங்கணம் கட்டியுள்ளது.

நாட்டின் அனைத்து மக்களும் யுத்தத்தை வெறுக்கும்போது உள் குத்து வெட்டுக்களால் புரையோடிப்போன விஜயதுங்கா தலைமையிலான ஐ.தே.க ஆட்சி தமிழர்களின் இரத்தத்தைக் காவு கேட்டு நிற்கிறது.

ஒருபுறம் சமாதானத்திற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று கூறிக் கொண்டு கடந்த 2, 3 மாதங்களில் 500 கோடி ரூபாவுக்கு ஆயுதங்களை வடபகுதித் தாக்குதல்களுக்கென ரஷ்யா, தென்னாபிரிக்கா, பெல்ஜியம், சீனா, செக்கோசிலவாக்கியா நாடுகளிலிருந்து வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது.

வடபகுதியிலுள்ள இராணுவத்தின் தொகையை சுமார் ஒரு லட்சம் ஆக்குவதற்காக கிராமங்களிலிருந்து சிங்கள இளைஞர்களை பெருஞ் சிரமப்பட்டு திரட்டுகிறது. இப்போது 70,000 இராணுவம் வடபகுதியில் நிலை கொண்டுள்ளது. இனவெறி அரசின் யுத்த முஸ்தீபு மறுபுறம் புலிகளை யுத்தத்திற்குத் தூண்டுவதற்கும் அதற்காக மக்களிடம் இரத்தம், நிதி, போருக்கான சிறுவர்கள் என வதைப்பதற்கும் வழிவகுக்கிறது.

இலங்கையரசு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் இலட்சணம் இப்படியிருக்க மனித உரிமைகளைப் பற்றி வாய்கிழியப் பேசும் ஐரோப்பிய நாடுகளைப் பெருமளவு கொண்ட ஐ.நாவின் சமூக பொருளாதார மனித உரிமைக் கவுன்சில் தென்னாசியாவில் மனித உரிமைகள் பேணப்படும் நாடாக இலங்கையை அங்கீகரித்துள்ளன.

ஒரு இன சங்காரம் இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்படுவது இவர்களுக்குத் தெரியாமல் போனது பெரிய மர்மம்தான்.

எனவே ஐ.தே.கவின் தமிழர் விரோத யுத்தவெறி நடவடிக்கைகளுக்கெதிராக நாட்டின் அனைத்து மக்களும் அணிதிரள வேண்டியது இன்றைய உடனடித் தேவையாகும்.

## மன்னாரில் புளொட் இயக்கத்தின் அராஜகம்

மன்னாரில் தனியார் வீடொன்றில் கொள்ளையடிக்கச் சென்ற கும்பலொன்று புலிகளைப்போல பேசி பணம் நகை எல்லாவற்றையும் சூறையாடியது. பின்னர் இன்னுமொரு கோஷ்டி அவர்களைப் பிடிக்கச் செல்வதுபோல் பாவ்லா காட்டி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் சம்பந்தப்பட்ட வீட்டுக்காரரின் மைத்துனி மரணமானார்.

கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணுக்கு இரங்கல் தெரிவித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டது. துண்டுப்பிரசுரத்தில் உள்ள விடயம் இதுதான்;

சமூகவிரோத சதியில் பலியான திருமதி நிர்மலாதேவி விஜயராகவன் அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாப அஞ்சலிகள்.

*மன்னார் மீட்கப்பட்ட பிரதேசமாம்!*

..........

*இது இனவாத அரசின் பிரகடனம்*
*இங்கு எதுதான் மீட்கப்பட்டுள்ளது.*
*மக்களின் மாமூல் வாழ்க்கை*
*அடிப்படை வசதிகள் அமைதி*
*ஆறுதல்*
*நிம்மதிப் பெருமூச்சு எதுவுமே*
*இன்னும் மீட்கப்படவில்லை.*
*வீட்டிலிருந்து சென்றவர் இன்னும்*
*மீண்டுவரவில்லை.*
*காணாமல் போவோர் பட்டியல்*
*மட்டுமே*
*நீண்டு போகுது.*
*களத்தில் இங்கு அரசபடைகள்*
*அதற்கு உதவியாய் ஆயுதப்படைகள்*
*இதற்கு இடையில் உயிர்பறிப்பு*
*இவைதான் இங்கு மீட்கப்பட்டவை.*
*பிரிந்த உயிர் மீண்டுவருமா?*
*நிகழும் சோகம் என்று தீருமோ*
*இருண்ட மன்னார் மீண்டும் விடிய*
*மக்கள் சக்தி திரண்டு எழுக!*

16.4.94 அன்றிரவு மன்னாரில் இடம்பெற்ற சதிக்கும்பலின் சமூகவிரோதச் செயலால் பாதிக்கப்பட்டு நலிவுற்றிருக்கும் குடும்பத்தினரின் சோகத்தில் நாமும் பங்குபற்றுவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


ஆனால் 20.04.94 புளொட் இயக்கத்தைச் சேர்ந்த கோஷ்டியொன்று அங்கு பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் கடமையாற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் டேவிட்டை வீதியில் வைத்து கண்மூடித்தனமாக தாக்கியதோடு அவரைக் கடத்திச் சென்று சித்திர வதை செய்தது.

பின்னர் மன்னாரில் இருந்த மத்தியகுழு உறுப்பினர் ஏ.ஜி.லிங்கேஸ்வரனின் முறைப்பாட்டையடுத்து பொலிசார் தேடுதல்மேற்கொண்டனர். இதனையறிந்து புளொட் அவரை விடுதலை செய்தது. அவர் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏன் அவரை தாக்கினார்கள் கடத்தினார்கள் என விசாரித்தபோது, தங்களைப்பற்றி துண்டுப்பிரசுரம் வெளியிட்டதனால்தான் தாக்கினோம் என்றார்களாம். இத்தனைக்கும் அப்பிரசுரத்தில் எந்த இயக்கத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை.

தொடர்ச்சி 7 ம்பக்கம் ☛

## புள்ளி விபரம்




படிப்பகம்

www.padippakam.com

# கண்ணோட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் 17வருட சர்வாதிகார ஆட்சிமீது தென் மாகாண மக்கள் வெறுப்பை உமிழ்ந்துள்ளார்கள். இனிமேலும் சிங்கள இனவாதம் என்ற பருப்பு மக்கள மத்தியில் அவியும் என்ற இனவாத அரசியல்வாதிகளின் நப்பாசைகளில் பேரிடி விழுந்துள்ளது.

திறந்த பொருளாதார கொள்கையினால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளோம் என்ற பொய்ப்பிரச்சாரங்களையெல்லாம் மக்கள் காதுகொடுத்துக் கேட்கவில்லை. அவர்களின் மனங்களில் ஆழப்பதிந்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் படுகொலைப் பயங்கரவாத அரசியலே. அதன் யுத்தவெறிக் கொள்கைகளையும், பச்சை இனவாதக் கருத்துக்களையும் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதை தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல்களில் வெற்றி வாய்ப்புக்கள் பிரகாசமாக இருக்கும் மக்கள் கூட்டணியினர் நாட்டின் எரியும் பிரச்சினையான தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைக்கப் போகிறார்கள்.

இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்று தமிழ் மக்கள் மனம் சலித்துப்போயுள்ளார்கள். சிங்கள இனவாதத்தைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சியோ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. எனவே பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைக்கிறார்கள் என்பதனை எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் இவர்கள் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும். இல்லையேல் அண்ணன் காட்டிய வழியம்மா அதனால் விழைந்த பழியம்மா என்பதுபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் வழியைத் தொடர்ந்து பழிசுமக்க வேண்டி ஏற்படலாம்.

இனவாதத்தை தெற்கின் சிங்கள மக்கள் விரும்பவில்லை. எனவே எதிர்காலத்தில் ஆட்சியமைக்க வாய்ப்புள்ள மக்கள் கூட்டணியினர் யுத்தம், தேசிய இனப்பிரச்சினை, வெள்ளி விழாவை நெருங்கும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம், சிறையில் வாடும் அப்பாவித் தமிழர்கள், சிறுபான்மை இனங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக தமது நிலைப்பாடுகளையும் தீர்வுகளையும் திட்டவட்டமாக பகிரங்கமாக இப்போதே மக்கள் முன் வைக்க வேண்டும்.

இல்லாமல் பழைய குருடி கதவைத்திறவடி என்ற மாதிரி இனவாதப் பாதையில் காலடி எடுத்து வைத்தால் இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்.

சந்திரிகா குமாரணதுங்காவைப் பொறுத்தவரையில் சோஷலிச, ஜனநாயக கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர். அவர் கணவர் விஜயகுமாரணதுங்காவின் கருத்து தாக்கங்களுக்கு உட்பட்டவர். பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்களுடனும் நட்புபூண்டவர். அவர்மீதுள்ள நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வீண்போகாதவாறு விவேகத்துடன் செயற்பட வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாகும்.

## அவதூறு பரப்பும் சட்டத்தரணி.

டெலோ இயக்கத்திலிருந்து சிலமாதங்களுக்கு முன்னர் விலகி மீண்டும் அதனுள் நுழைந்திருக்கும் சட்டத்தரணி ஒருவர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீது அவதூறு பரப்பும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார்.

நான்கு வருடங்களுக்கு முன் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றைத் தொடர்புபடுத்தி வசைமாரி பொழிகிறார்.

அப்போது சபாநாயகர் பதவிக்காகவும், நிதி மந்திரி பதவிக்காகவும் அலையாய் அலைந்தவர் பின்னர் ஐ.தே.கவின் தயவில் தனது தொழிலை மீள்புனரமைத்துக் கொண்டவர். இவரின் ஒவ்வொரு சொந்தத் தேவைக்கும் ஒவ்வொரு அரசியல் கட்சி தேவைப்பட்டது. இத்தகைய பிழைப்புவாதிக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை அவதூறு செய்ய எந்த யோக்கியதையும் கிடையாது.

## புத்தாண்டு தின விளையாட்டு நிகழ்ச்சிகள்.

### வவுனியா நகரம்

தமிழ் சிங்கள புதுவருட தினத்தன்று வவுனியா நகரத்தில் கலைமகள் சனசமூக நிலையமும், கலைமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகளை நடத்தின. வவுனியாவில் உள்ள பல்வேறு விளையாட்டுக் கழகங்களும் இந்நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றின. பல இன மக்களும் இவ்விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றியது சிறப்பம்சமாகும்.

சைக்கிளோட்டம், மரதன், மென்பந்து, கரப்பந்து, சிறுவர்க்கான ஓட்டம், சறுக்குமரம் ஏறல், கயிறிழுத்தல், வினோத உடைப்போட்டிகள், சங்கீதக்கதிரை, விருந்தினர்க்கான ஓட்டம் என பல நிகழ்ச்சிகள் நடந்தன. மக்களும் பெருமளவில் குழுமியிருந்தார்கள்.

இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.ராஜா குகனேஸ்வரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.நவரத்தினம், வவுனியா நகரசபைத் தலைவர் திரு.லிங்கநாதன், பொலிஸ் அத்தியட்சகர் திரு நவரட்ணராசா, பிரதேசசபை செயலாளர் அமிர்தலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் தலைவர் திரு. விஜயரட்ணம் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ் அத்தியட்சகர் நவரட்ணராசா பல இனமக்களும் பங்குபற்றிய இந்நிகழ்ச்சியை இட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

நகரசபைத் தலைவர் லிங்கநாதன் நாம் சர்வதேச தரத்திற்கு விளையாட்டு வீரர்களைத் தயாரிக்காவிட்டாலும், குறைந்தபட்சம் தேசிய ரீதியிலாவது தரம்மிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டுமென்றார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.நவரத்தினம் தமதுரையில் இங்கு விளையாட்டுக் கழகங்கள் ஐக்கியப்பட்டுச் செயல்படுகின்றன. ஆனால் அரசியல்வாதிகளோ பேதங்களை உருவாக்குகிறார்கள் என்றார்.

ஒரு விளையாட்டுக் கழகத்தைத் தொடர்ந்து நடாத்துவதில் உள்ள சிரமங்களையும் அச்சிரமங்களையும் தாங்கிக் கொண்டு அவர்கள் பல தசாப்தங்களாக விளையாட்டுக் கழகத்தை நடாத்தி வருவதையிட்டு பாராட்டு தெரிவித்தார்.

இறுதியாக உரையாற்றிய திரு.ராஜா குகனேஸ்வரன் அவர்கள் இவ்விளையாட்டுக் கழகத்தின் மேம்பாட்டுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் ரூபா 5 லட்சம் ஒதுக்கியும் வவுனியாவிலுள்ள ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், ஆளும்கட்சி அரசியல்வாதிபோல் செயல்படும் அரச அதிபரும் அதனை விளையாட்டுக் கழகத்திற்கு கிட்டாமல் தடை செய்தார்கள் என்பதனை அம்பலப்படுத்தினார்.

பிரதேச செயலாளர் அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். இறுதியாக விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் திரு.காந்தி நன்றியுரையாற்றினார்.

### ஏறாவூர்.

புத்தாண்டு தினத்தில் ஏறாவூர் ஸ்ரீ வினாயகர் கலைக் கழகம் விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்தியது.

அப்பகுதி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கிராமசேவையாளர்கள் பொது அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் தோழர் நேசராசா (மத்திய குழு உறுப்பினர்) கலந்து கொண்டார்.

மரதன், சாக்கோட்டம், சங்கீதக் கதிரை உட்பட பல விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெருந்தொகையான மக்களும் திரண்டிருந்தார்கள்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

| | | |
|---|---|---|
| 29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-4464 | மன்னார் ☎ 023 - 2370 | 22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-2070 |

7A, 32 சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை
கொழும்பு-7
☎ 685826

வெளிநாட்டு முகவரிகள்:

| | | |
|---|---|---|
| Post Bag: 1041, Madras-17, India. | B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K. | P.Fach: 100206, 44002 Dortmund, Germany. |
| P.Box: 6800, Agincourt, Ont-MIS3C6, Canada. | 11, Roger Salenero, 95140, Garges Les, Gonnesse, France. | P. Fach: 506, Bern - 17, Switzerland |

www.padippakam.com


# வட-கிழக்கை பிரிக்கும் முயற்சியை தமிழ் முஸ்லீம் மக்கள் ஐக்கியப்பட்டு முறியடிப்போம்.

## முஸ்லீம் காங்கிரஸ் மாநாட்டில் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள்.

02.04.94 இல் கல்முனையில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லீம் காங்கிரசின் 12வது மாநாட்டில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உரையாற்றினார்.

அகில இலங்கை முஸ்லீம் காங்கிரசின் தலைவர் அஷ்ரஃப் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம் பலம், சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரி. பி. இலங் கரத்தினா, மற்றும் பல அரசியல் தலைவர்கள் பிர முகர்கள் பங்குபற்றினார்கள். 50ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தார்கள். பெருமளவில் முஸ்லீம் பெண்கள் வருகை தந்திருந்தது ஒரு சிறப்பம்சமாக இருந்தது.

தோழர் சுரேஸ் பிரேமச்சந் திரன் அவர்கள் உரையாற் றும்போது வட-கிழக்கு மக்களின் போராட்டத்தை பலவீனப்படுத்துவதற்காக தமிழ் முஸ்லீம் மக்களிடையே விரோதங்களை ஏற்படுத்துவது சிங்கள இனவாத அரசின் தந்திரோபாயங்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. அதேபோல் புலிகள் இயக்கம் தலைமுறை தலைமுறையாக ஐக்கியமாக வாழ்ந்துவரும் மக்களிடையே பாரதூரமான பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டிருக்கிறது.

சிங்கள இனவாத சக்திகள் வடக்கையும் கிழக்கையும் பிரிக்க கங்கணம் கட்டியுள்ளன. தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய நிலங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இன விகிதாசாரத்தில் பாரிய மாறுபாட்டை ஏற்படுத்திய ஆட்சியாளர்கள் இப்போது முற்றுமுழுதாகவே கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களின் ஆதிக்க நிலையை இல்லாதொழிக்கும் நோக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த முனைகிறார்கள். இதனை நாம் ஒருமித்த குரலில் எதிர்த்தாக வேண்டும் என்று அங்கு பெருந்திரளாக குழுமியிருந்த மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு அம்பாறை பகுதியிலுள்ள பல்வேறு கிராமங்கள், அகதிகள் முகாம்களுக்கு தோழர் பிரேமச்சந்திரன் விஜயம் செய்தார். கல்முனையில் இராமகிருஷ்ண மிஷன். பாடசாலையில் நடைபெற்ற ஊர் பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மக்களின் கஷ்டங்கள், துன்பங்களைக் கேட்டறிந்தார்.

மாமாங்கம், வீரமுனை ஆகிய இடங்களில் நடைபெற்ற கிராம மக்கள், ஊர் பெரியவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் உரையாற்றினார்.

மட்டு மாவட்டத்திலுள்ள ஊரணி, உப்போடை, முகத்துவாரம், கல்லடி ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உரையாடினார். காரைதீவு அகதி முகாமிற்குச் சென்று மக்கள் துன்பங்களை நேரில் பார்த்தார்.

காரைதீவு விபுலானந்தர் நற்பணிமன்றக் கட்டிடத்தில் நற்பணிமன்ற பிரதிநிதி களையும், ஊர்ப்பிரமுகர் களையும் சந்தித்தார். இந்த நற்பணிமன்றக் கட்டிடத்தின் வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா ஒதுக்கியும் அரசாங்கம் அதனை தடை செய்து தாமதப்படுத்து வதையும் தோழர் பிரேமச் சந்திரன் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

திருக்கோவில் தம்பிலுவில் பகுதிகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. மல்வத்தை விபுலானந்த மகாவித்தி யாலயத்தின் சேதமடைந்த பாடசாலைக் கட்டிடத்தை திருத்துவதற்கு உதவி பெற்றுக் கொடுப்பதாக வாக் குறுதியளித்தார். வீரமுனை ஸ்ரீ சிந்தா யாத்திரை பிள்ளையார் கோவில் முன்றலில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.



காரைதீவு அகதிகள் முகாமில்...

## கிழக்கு மாகாண கிராமங்களுக்கு நேரில் விஜயம்.

மட்டக்களப்பு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி காரியாலயத்தில் உள்ளூர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தப் பட்டது. அதில் தோழர் பிரேமச்சந்திரன் அவர்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற் றங்கள் நடத்தப்படவில்லை என்று கூறிக்கொண்டு அரசு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு எல்லைப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதை ஆதாரபூர்வமாக எடுத் துரைத்தார். "மாசன்புர" கிராமத்தில் ஆயிரம் வெளி மாவட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதையும், வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவில் ஓமடியகுளம் என்ற தமிழ் கிராமம் "குறுளுபத்த" வாகவும் மதுரங்கேணி "ரன்கெதரன" ஆகவும் பெயர் மாற்றப் பட்டுள்ளன. இக்கபட நாடகத்தை அம்பலப் படுத்துவதோடு, வெளிநாட்டுத் தூதுவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவேன் என்றும் குறிப்பிட்டார்.

கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி ஜனாதிபதியின் கொள்கைகளுக்குக் கிடைத்த தோல்வி என்றார். வடக்கு கிழக்கைப் பிரிக்கும் சர்வஜன வாக்கெடுப்பை தடுக்கக் கூடியதாக ஜனநாயக முறைப்படியான பல்வேறு நெருக்கடிகளை அரசுக்கு கொடுப்போம். இணைப்பிற்கு ஆதரவாக வெகுஜன இயக்கங்களை முன்னெடுக்கத் தயங்கமாட்டோம். உள்ளூராட்சித் தேர்தல் மூலம் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்த அரசு முயல்கிறது. ஆனால் சுயாதீனமான சிவில் நிர்வாகம் நடத்துவதற்கான நிலமைகள் இங்கு இல்லை. மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டிடம் இன்னும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஜனநாயக சூழ்நிலையோ, மக்கள் தமது கருத்துக்களை தயக்கமின்றி வெளியிடக்கூடிய நிலவரமோ இல்லாத நிலையில் உள்ளூராட்சி அமைப்புக்கள் சுயாதீனமாக செயற்பட முடியாது என்பதனையும் தெளிவுபடுத்தினார்.❑.

– சோலையூரான்





முஸ்லீம் காங்கிரஸ் மாநாட்டில்...

படிப்பகம்

## அரசு – புலிகள் கெடுபிடியால்

# அவதியுறும் மன்னார் மக்கள்

இலங்கையில் இன ஐக்கியத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பகுதிகளில் மன்னாரும் ஒன்று. 2014 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மன்னார் மாவட்டத்தில் 1,31,000 தமிழ்–முஸ்லீம் மக்கள் அரசின் இன நெருக்குதல்களுக்கு மத்தியிலும் ஐக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

## இருதலைக் கொள்ளி எறும்பு நிலை.

இன்று அரசினதும் புலிகளதும் அர்த்தமற்ற யுத்தக் கெடுபிடிகளால் இருதலைக்கொள்ளி எறும்பாக பெரும் இன்னல்களை இம்மக்கள் எதிர்நோக்கி நிற்கிறார்கள்.

வட–கிழக்குப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் இன ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டதும் பெரும்பாலான மக்கள் அகதிகளானதும் இங்குதான் எனலாம். இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வட–கிழக்கு மாகாண அரசு ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஓரளவுக்கேனும் மேற்கொள்ளப்பட்டு மக்கள் சகஜவாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 1990இல் ஏற்பட்ட புலிகள்–அரசு யுத்தத்தைத் தொடர்ந்து மாவட்டத்தின் 90,000 தமிழ் மக்களில் 50,000 பேர் அகதிகளானதுடன் காலாதிகாலமாக ஐக்கியமாக வாழ்ந்த மாவட்டத்தின் 40,000 முஸ்லீம் மக்கள் உடுத்த துணியுடன் ஒரேநாளில் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். இவ்விதம் அகதிகளான மக்கள் ஆங்காங்கே அல்லல்பட்டுக் கொண்டிருக்க இயல்பு நிலைக்குத் திரும்பிய பகுதியாக மன்னார் தீவுப்பகுதியை அரசு பிரகடனப்படுத்திய போதும் ஏறக்குறைய 20,000 மக்களே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

சொந்த இடத்து வாழ்நிலை அவர்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்த இடங்களை விட மோசமானதாகவே உள்ளது.

தற்போது அமைதிநிலை ஏற்படாமலே மக்கள் மீளக் குடியமர்த்தப்படுகிறார்கள். இப்பகுதியின் ஜீவநாடியான தொழில்களான மீன்பிடியும், விவசாயமும் அரசின் பொருளாதாரத் தடையினாலும், கடல்வலயத் தடையினாலும் முற்றுமுழுதாகவே ஸ்தம்பிதமடைந்துள்ளன. இதனால் தொழிலின்மை, விலைவாசி என்பன பூதாகரமான பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன.

## தண்ணீர் இங்கு கண்ணீர்க்கதை

குடிநீர் வழங்கலானது அரசு தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் மன்னார் தீவில் சீர்செய்யப்படவில்லை. பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்டுக்கரைக் குளத்திலிருந்து அடம்பன், வங்காலை, மன்னார் பட்டினப்பகுதிக்கான குடிநீர் வழங்கும் திட்டமானது புலிகளின் நடவடிக்கைகளால் நிர்மூலமாக்கப் பட்டுள்ளது.



மாகாணசபைக் காலத்தில் துரிதமாக்கப்பட்டு, மேற்படி திட்டத்தால் மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொண்டிருந்த வேளை செம்மணல் தீவில் அமைந்திருந்த நீர்வழங்கல் தொட்டியும், வங்காலை நீர்த்தொட்டியும் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு நிர்மூலமாகக் காட்சியளிக்கிறது. மிகப்பழமை வாய்ந்த குழாய்களே தற்போது பட்டினத்திற்கு நீரைக் கொண்டு வருகின்றன. பழுதடைந்த நிலையிலுள்ள இக்குழாய்கள் தண்ணீரையல்ல கண்ணீரையே சிந்துகின்றன எனலாம்.

250 குழாய்களை உள்ளடக்கிய மேற்படி நீர்வழங்கல் தொகுதியை புனரமைக்க பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் அதைச் செய்து முடிப்பதில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அசமந்தப் போக்கையே காட்டுகின்றனர்.

## கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை.

மன்னார் மக்கள் எதிர்நோக்கும் மற்றுமோர் முதன்மையான பிரச்சினை மின்சாரச் சீர்கேடாகும். இலங்கையிலேயே மின்சாரத்திற்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படும் இடமாக மன்னார் உள்ளபோதும் மக்களுக்கான மின்சாரத்தை சீர் செய்து வழங்குவது மின்சார சபையினர் தூங்கிவழிகின்றனர். ஏற்கனவே இருந்த மின்சார சாதனங்களைப் பாதுகாப்பது, வழங்கக்கூடிய மின்சாரத்தை வழங்குவது இங்கு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே உள்ளது. இதற்கு மின்சார சேவையை மேற்கொள்ளும் மன்னார் பிரதேச சபைக்கும், மின்சார சபைக்கும் இடையிலான நான் செய்வதா? நீ செய்வதா? என்ற இழுபறி தடையாக உள்ளது. இதற்குமேலாக இலங்கை மின்சார சபையானது மிகமோசமான அலட்சிய மனோபாவத்துடன் நடந்து கொள்கிறது.

**இங்கு தண்ணீர்க்குழாய்கள் தண்ணீரையல்ல கண்ணீரையே சிந்துகின்றன.**

கடந்த ஜனவரியில் மன்னாருக்கு வருகைதந்த அமைச்சர்கள் இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்களை வழங்குவதாக வாக்குறுதியளித்துச் சென்றார்கள். அதோடு சரி, ஒன்றும் நடைபெறவில்லை. மன்னாரில் ஏற்கனவே இருந்த ஒரு மின் உற்பத்தி இயந்திரமும் பழுதடைந்து விட்டது. வாரக்கணக்கில் மன்னார் இருளில் மூழ்கிவிடுவது ஒரு சர்வசாதாரண விடயமாகிவிட்டது.

## உரலுக்கு ஓரிடி ! மத்தளத்திற்கு ஈரிடி !!

மன்னார் மக்களின் மீளக்குடியமர்வுக்கு வீதிப்போக்குவரத்தானது மிகப்பெரிய தடையாக உள்ளது. மன்னார் தலைமன்னார் வீதி, மன்னார் வங்காலை வீதி எல்லாமே குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன. வீதித் திருத்தத்திற்கு பல வழிகளில் நிதி ஒதுக்கப்பட்ட போதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு கல்லும், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு தாரும் எடுத்துச் செல்வதை ஏட்டிக்குப் போட்டியாக இராணுவமும் புலிகளும் தடை செய்து வருவதால் மக்கள் தொடர்ந்து பெரும் சிரமங்களையும், சங்கடங்களையும் எதிர்நோக்கியவர்களாகவே உள்ளனர். தார் வீதிகளெல்லாம் மண் வீதிகளாக மாறிவிட்டன.

உரலுக்கு ஓரிடி மத்தளத்திற்கு ஈரிடி என்பதுபோல் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியைச் சேர்ந்த மக்கள் அரசு – புலிகள் இரு பகுதியினராலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். இப்பகுதியில் அவ்வப்போது புலிகள் பதுங்கியிருந்து சிறுசிறு தாக்குதல்களை மேற்கொண்டு மக்களை அனாவசிய தொந்தரவுகளுக்கு உட்படுத்துவதுடன், நாளாந்த வாழ்க்கையை சீர்குலைத்து வருகிறார்கள். மறுபக்கம் படையினரின் நடவடிக்கைகளால் மக்கள் பெரும் தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசமென கூறப்படுவதில் மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு செல்வதானால் சோதனைச் சாவடிகளில் பல கெடுபிடிகளை அனுபவிக்க வேண்டி வருகிறது. அணுகுமுறைகள் மிக மோசமானதாகவே உள்ளன. இராணுவத்துடன் சேர்ந்து செயல்படும் சிலரின் செயற்பாடுகளும் மக்களுக்கு பெரும் இன்னல்களை விளைவிக்கின்றன. அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதும் கடத்தப்படுவதும் காணாமல் போவதும் தொடர்ந்துகொண்டே போகிறது. இவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதில் ஐ.சி.ஆர்.சி., யு.என்.எச்.சி.ஆர் என்பன முயற்சிகளை மேற்கொண்டும் பலனேதுமில்லை.

## வீடுகள் படையினர்வசம். மீளக் குடியமர்வது எவ்வாறு?

இராணுவமும், பொலிசும் தமது சொந்தத் தேவைகளுக்கென எடுத்துக் கொண்ட தனியார் கட்டிடங்களுக்கு நஷ்டஈடோ, வாடகையோ இதுவரை வழங்கவில்லை. சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு கூறிக் கொண்டு அவர்களின் வீடுகளில் தமது படைகளை வைத்துக் கொண்டிருக்கிறது அரசு. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மீளக்குடியமர்வு நிவாரணத்தையும், வீடமைப்பு மானியம் கடன் என்பவற்றையும் பெற முடியாத நிலமைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன.

இவ்விதம் அரசினதும் புலிகளதும் கெடுபிடிகளால் மக்கள் அல்லல் பட்டிருக்க அத்தி பூத்தாற்போல் பவனி வரும் அரை மந்திரிகளும் இனவாத அரசின் அடிவருடிகளும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை விடுத்து கல்யாண மண்டபம் கட்டி அதில் தங்கள் பெயர்களை பதிய வைப்பதிலேயே ஆர்வம் காட்டுகிறார்கள். மன்னார் தீவு வழமைக்குத் திரும்பிய பகுதியாக கூறிக்கொண்ட போதும் அரசின் கடல்வலயத்தடை, பொருளாதாரத்தடை, தொழில் வசதியின்மை, விலைவாசி உயர்வு, போக்குவரத்து வசதியின்மை, மின்சாரச் சீர்குலைவு, குடிநீர்ப் பிரச்சினை, வைத்திய வசதிக் குறைபாடு, எல்லாவற்றுக்கும் மேலாக உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை ஆகியவற்றிற்கு உடனடித்தீர்வையே மக்கள் வேண்டி நிற்கின்றனர். ❑

– ஏ.ஜி.லிங்கேஸ்வரன் (மத்திய குழு உறுப்பினர்).

www.padippakam.com

# மலையகப் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள்

பெருந்தோட்டங்களிலும் அதைச்சூழ்ந்துள்ள சிறிய பெரிய நகரங்களிலும் வாழும் பெண்களையே அதாவது இந்தியாவிலிருந்து பெருந்தோட்ட பயிர் செய்கைக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டோரின் வழித்தோன்றலில் வந்த பெண்களே இங்கு மலையகப் பெண்கள் எனக் குறிப்பிடப் படுகின்றது. இவர்களில் பெரும்பான்மையானோர் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு இந்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவர்கள் நேரடியாகவே உற்பத்தித் துறையில் ஈடுபட்டவர்கள் என்பதனால் . பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுமீது அக்கறை கொண்டுள்ள அனைவரும் இவர்கள் மீது அக்கறை கொள்வதும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் மிகவும் அவசியமானது. இலங்கை பூராவும் நகர சுத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களில் பெரும்பான்மை யானவர்கள் மலையகப் பெண்களே.

இம் மலையகப் பெண்களை அவர்களின் சமூக பொருளாதார, கல்வி அந்தஸ்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. **மலையகத்திலே நகரங்களில் வாழும் பெண்கள்.**
2. **தோட்ட உத்தியோகத்துறை சார்ந்த பெண்கள்.**
3. **தொழிலாளர்கள் மத்தியிலிருந்து கல்வி அறிவு பெற்ற பெண்கள்.**
4. **பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்த பெண்கள்.**
5. **எழுத்தறிவே இல்லாத பெண்கள்.**

இவர்களை ஐந்து வகையாக வகைப்படுத்திய போதிலும் இவர்கள் அனைவரும் பெண்கள் என்ற அடிப்படையில் எல்லாப் பெண்களும் எதிர் நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும் அதேவேளையில் ஒரு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும், ஓர் வளர்ச்சி குன்றிய சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும் சில விசேட பிரச்சினைகளுக்கும் அவரவர் சமூக, பொருளாதார அந்தஸ்திற்கேற்ப முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## மலையக நகர்ப்புறத்தில் வாழும் பெண்கள்.

இவர்களில் பெரும்பான்மை யானோர் வியாபாரத்துறையில் ஈடுபட்டிருப்போரினதும், நகர்ப்புறங்களில் வேலைசெய்வோரினதும் பெண்கள். இவர்கள் பெரும்பாலும் வீட்டுப் பெண்களாகவே இருப்பர். சிலர் ஆசிரியர் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டிருப்பினும் மற்றைய வீட்டுப் பெண்களில் இருந்து வித்தியாசப்பட்டிருப்பவர்களைக் காண்பது மிகமிக அரிது. இவர்கள் மலையகத்தைச் சார்ந்தோர் எனினும் பொருளாதார அடிப்படையில் ஏனைய மலையகப் பெண்களைவிட உயர்ந்தவர்கள். அத்தோடு தாங்கள் ஏனைய மலையகப் பெண்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்ற மனோபாவத்தைக் கொண்டவர்கள் என்றபடியால் எல்லா சந்தர்ப்பங்களிலும் தம்மை வித்தியாசப்படுத்தி அடையாளம் காட்டிக்கொள்ளவே முனைவர். இவர்களே மலையக சமூகத்தின் மத்தியிலான மேல்மட்ட வர்க்கப் பெண்கள். ஏனைய வளர்ச்சியடைந்த சமூகப் பெண்களைப் போன்று அறிவு ரீதியாகவும், நாகரீக ரீதியாகவும் வளர்ச்சி அடைந்தோராயினும் பழமைவாதக் கருத்துக்களில் இருந்து விடுபடாதவர்களாகவும் ஏனைய சமூகங்களைச்சார்ந்த நகர்ப்புறப் பெண்களைவிட

**டாக்டர் சாந்தகுமார்.**

பெண்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்ற சிந்தனையைக் கொண்டவர்கள்.பஜனைகளுக்குப் போய் வருவது, கணவனுக்கு அடங்கி ஒடுங்கி நடப்பது பழைய சம்பிரதாயங்களை அவ்வாறே கடைப்பிடிப்பதையே விரும்புகின்றனர். அவ்வாறு நடப்பவர்களையே ஒழுக்கமான பெண்கள் என்று கருதுகின்றனர். வித்தியாசமான சிந்தனையைக் கொண்ட ஓர் இருவரைக் காணலாம். ஆனால் சூழ்நிலை காரணமாக நடவடிக்கைகளில் இறங்க மாட்டார்கள். உழைக்கும் பெண்கள் சக்தியாகும்போது இவ்வாறானவர்கள் இணைந்து கொள்வார்கள்.



நகரங்களில் நகரசுத்தி தொழில் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் நிலை பெரும்பாலும் தோட்டத் துறையில் ஈடுபட்டிருப்போருக்கான பிரச்சினைகளைப் போன்றதாகவே இருக்கும். இருப்பினும் ஏனைய சமூகத்தைச் சார்ந்த நகரசுத்தி தொழில்ாளர்களுக்கு கிடைக்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

## தோட்ட உத்தியோகத் துறை சார்ந்த் பெண்கள்.

பொருளாதாரப் பிரச்சினை எவ்வளவு இருப்பினும் இவர்களது பெற்றோர் கல்வியறிவு உடையவராக இருப்பதாலும் "டெடி", "மம்மி" கலாச்சாரத்தை அந்தஸ்தாகக் கருதுவதாலும் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளுக்கு அனுப்பி கற்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஒரு மாயை சூழலிலேயே வளர்ப்பர். இவர்களின் பெற்றோரின் எண்ணம் அநேகமாக இவர்களை நகர்ப்புறப் பெண்களின் நிலைக்கு கொண்டு வருவதாகவே இருக்கும்.

இப்பெண்களின் சிந்தனையும் உயர்வர்க்க பெண்களைப் பற்றியதாகவே இருக்கும். தமது உறவினர்களில் சிலர் தொழிலாளர்களாக இருப்பதை வெளிப்படுத்த தயங்குவேதாடு தொழிலாளப் பெண்களை இரண்டாம் தரமாக கருதுவோராக்வும் இருப்பர். பெண்களுக்கான பிரச்சினைகளை ஓரளவு மேலோட்டமாக அறிந்திருப்பினும் அதைப்பற்றி அக்கறை செலுத்துவதில்லை. பொதுவாக மலையக தொழிலாளப் பெண்கள் முகம் கொடுக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றார்கள், என்பதை அறியாதவர்களாகவும் மலையகத் தொழிலாளப் பெண்களின் அபிவிருத்தியிலேயே தமது அபிவிருத்தி தங்கியுள்ளது என்பதைப் புரியாதவர்களாகவும் உள்ளனர். இவர்கள் வளர்ச்சியடைந்த சமூகப் பெண்களுக்கும் தமக்கும் உள்ள பாரபட்சத்தை அறியாதவர்களாகவும் உள்ளனர்.

(தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் புலிகளின் அட்டகாசம்

☆ புலிகள் மக்களின் சகல நுகர்வுப் பொருட்கள் மீதும் தமது சுரண்டல் கரங்களை அகல விரித்துள்ளார்கள். அரிசி, மண்ணெண்ணெய், சீனியிலிருந்து சிகரட், சாராயம் வரை வரி என்ற பெயரில் புலிகளின் கப்ப வசூலுக்குட்படாத பொருட்கள் எதுவும் இல்லை என்றே கூறலாம். பற்றாக்குறைக்கு வங்கிகள் திறந்து முழுதாகவே மக்களின் பணத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

☆ கப்பல் கட்டணம் உயர்கிறது என்று கொழும்பு பத்திரிகைகளில் செய்தி வந்தால் போதும். ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்த பொருட்களின் விலையெல்லாம் ஏறிவிடும். கட்டண உயர்வு ரத்துச் செய்யப்பட்டது என்று திரும்பவும் பத்திரிகைச் செய்தி வந்தாலும் பொருட்களின் விலை பழைய நிலைக்கு வர சிறிது நாளாகும்.

☆ இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் ஆயிரம் ரூபா முற்பணம் செலுத்துபவர்களுக்கு ( இது திருப்பிச் செலுத்தப்படும் பணம் அல்ல) மண்ணெண்ணெய், டீசல் கிரமமாக கிடைப்பதற்கு ஒழுங்கு செய்வதாக பலரிடமும் வசூலித்தார்கள். இதுவரை 25 ரூபா மண்ணெண்ணெய்தான் வழங்கியுள்ளார்கள். ஆனால் கள்ள மார்க்கட்டில் புலிகளின் அனுமதியுடன் 75 ரூபாவிற்கு மண்ணெண்ணெய் தாராளமாக விற்கப்படுகிறது.

☆ தவிர யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைக்குரிய பலர் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருப்பதால் அவர்களின் மண்ணெண்ணெயும் புலிகளுக்கே சொந்தமாகிறது.

☆ ஊரைவிட்டு அகதிகளாக வெளியேறியவர்களின் சொத்துக்கள் மாத்திரமல்ல வீட்டு வாடகையையும் இவர்களே வசூலிக்கிறார்கள். ஆனால் வாடகை வழமையைவிட மிக மிக அதிகம்.

☆ முன்னர் யாழ்ப்பாணத்தில் காணி,வீடு விற்பதற்கு புலிகள் தடை விதித்திருந்தார்கள். இப்போது அனுமதிக்கிறார்களாம். ஆனால் பெருந்தொகையான பணம் புலிகளுக்கு கமிசனாக கொடுக்கப்பட வேண்டும்.

☆ யாழ்ப்பாணத்தில் கடை ஒன்றில் புலிகள் பொருட்கள் வாங்கும்போது சிட்டை போடுபவரின் கவனக்குறைவால் காபன் பிரதியில் பொருட்களின் விலைவிபரம் விழவில்லை. 15 ரூபா பொருளுக்காக கடைக்காரர் ஒரு லட்சரூபா தண்டமாக செலுத்தினாராம்.

☆ புலிகள் தாம் காருண்ணியம் மிக்கவர்கள் எனக் காட்டுவதற்காக 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு 100ரூபா கடவுச்சீட்டுக் கட்டணம் அறவிடுகிறார்கள். ஆனால் 50 வயதுக்கு குறைந்தவர்களுக்கு 250 ரூபாவும், அவசர கடவுச்சீட்டுக்கு 500 ரூபாவும் அறவிடுகிறார்கள். பார்த்தீர்களா! எப்படிக் குறைத்து எப்படி வெட்டுகிறார்கள்.

☆ ஒரு கைக்குழந்தைக்குத் தாய் ஒரு அவசர காரியத்திற்காக கொழும்பு செல்ல வேண்டியேற்பட்டது. குழந்தைக்கு கடவுச்சீட்டை மறுத்து தாய்க்கு அனுமதித்தார்கள். என்னே இரக்கம்!

☆ ஒரு சிறுவனோ, சிறுமியோ யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதாக இருந்தால் புலிகளுக்கு ஒரு லட்சரூபா தாரைவார்க்க வேண்டும்.

☆ ஒரு குடும்பஸ்தர் யாழ்ப்பாணத்து விலைவாசிகளை தாங்கமுடியாது வேறிடம் சென்று பிழைக்க விரும்பினார். அதற்கு அனுமதி கோரி புலிகளை அணுகினார். அவர்களின் முதற்கேள்வி உன்னிடம் வீடு வளவு இருக்கிறதா என்பதே. இவர் இல்லை என்றார். வேறு என்ன இருக்கிறது என்று திருப்பிக் கேட்டார்கள். இவர் சமையல் மற்றும் வீட்டுப்பாவனைக்கான தட்டுமுட்டுச் சாமான்கள் இருக்கிறதென்றார். சைக்கிள் இருக்கிறதா என்று கேட்டார்கள். இவர் ஆம் என்றார். எல்லாவற்றையும் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டு இவர் வெளியயேற அனுமதிக்கப்பட்டார். இப்போது புதிய இடத்தில் இந்த தட்டுமுட்டுச் சாமான்கள் இல்லாமல் எவ்வாறு வாழ்க்கையைத் தொடங்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்.

( தொடரும் )

படிப்பகம்

# யுத்தமும் கஷ்டமும்

## கிழக்கு மாகாண விவசாயிகள் படும் பாடு

கிழக்கு மாகாணத்தின் விவசாய முறையானது குறிப்பாக நில வாடகை முறைமை நாட்டின் மற்றைய பகுதிகளில் கையாளப்படும் முறைகளிலிருந்து வேறுபடுகிறது. நாட்டின் பிற பகுதிகளில் நிலவும் "அந்த" முறை "ஒத்தி" யிலிருந்து வேறுபட்டது. "ஒத்தி" முறையில் நில வாடகை திட்ட வட்டமாக இருப்பதால் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் அதிகளவு பிரயாசை எடுப்பதற்கும், அதிகளவு முதலீடு செய்வதற்கும் ஊக்கப்படுத்தப்படுகிறார். இதனால் கிடைக்கும் பலாபலனும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் கிழக்கில் நீர்ப்பாசன வசதி உள்ள நிலத்தின் அளவு குறைவாக இருப்பதும், அண்மைக் காலமாக யுத்தமும் விவசாயத்தை மட்டுப்படுத்துவனவாக உள்ளன.

காடுகளிலிருக்கும் புலிகள் இயக்கம் நீண்டகால யுத்தத் தேவைக்காக நெல்லை வாங்குகிறது. நெல் நீண்டகாலத்திற்கு பழுதடையாமலும் இருக்கும். இராணுவமோ நெல்லைக் கட்டுப்படுத்தி புலிகளைக் கட்டுப்படுத்த முனைகிறது. இதனை மேலோட்டமாகப் பார்க்கும்போது சாதாரண விடயமாகத் தோன்றலாம். ஆனால் இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்களே. அவர்களின் வாழ்க்கையே இதனால் கேள்விக்குறியாகிறது. இராணுவத்தினர் இதன் மூலம் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைக்கும் வேலையைச் செய்கிறார்கள். விவசாயி இராணுவத்திடமிருந்து அனுமதிச் சீட்டுப் (பாஸ்) பெற்றிருக்க வேண்டும். இந்தமுறை கீழ்மட்டத்திலுள்ள இராணுவத்தினர் அனுமதிச் சீட்டு வழங்குவதற்கு பொது மக்களிடம் பணம் வசூலிப்பதற்கு வழிவகுக்கிறது. வாவிக்கு மறுபுறமுள்ள புலிகளோ நெல்லுக்கு வரி விதிக்கிறார்கள். விவசாயிகள் எப்படியும் வரி கொடுத்தேயாக வேண்டும். இல்லாவிடில் அவர்கள் வாழ முடியாது.

வீடுகளில் 5 சாக்குகளுக்கு மேல் நெல்லை வைத்திருக்க முடியாது. வைத்திருந்தால் விசாரணைகளுக்கும், அனாவசிய தொந்தரவுகளுக்கும் உள்ளாக நேரிடும். 5 சாக்கு நெல்லை வைத்துக் கொண்டு 6 பேரைக் கொண்ட ஒரு குடும்பம் ஒரு வருடத்திற்குச் சீவிப்பதே சிரம சாத்தியமானது. அடுத்த போகச் செய்கைக்குரிய விதை நெல்லையும் பெறமுடியாது. விவசாயம் தெரிந்த எவருக்கும் இவை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

எனவே 5 மூடைகளுக்கு மேற்பட்ட நெல்லை உடனடியாக விற்க வேண்டிய நிலையில் வியாபாரிகளோ தவித்த முயல் அடித்த கணக்காக மிகக் குறைந்த விலையில் நெல்லைப் பெற்று கொள்ளை லாபமடிக்கிறார்கள். எனவே இந்த 5 சாக்குத் திட்டம் கொள்ளை லாபமடிக்கும் பேர்வழிகளுக்கே உதவுகிறது.

புலிகள் "ஜொனி" க் கண்ணி வெடிகளை வயல்களின் மத்தியில் விதைக்கிறார்கள். ஆனால் அவர்கள் நினைப்பது போல் பாதிக்கப்படுவது படையினரல்ல. இங்கு கால் கை இழப்பிற்கு உள்ளாவது சாதாரண ஏழை விவசாயிகளே. படையினரோ, விசேட அதிடிரப் படையினரோ விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் எதனையும் அனுமதிக்கவில்லை. யானைகள் வயல்களை நாசம் செய்வதால் இவர்கள் எதுவுமே செய்ய முடியாத பரிதாப நிலையே நிலவுகிறது. விவசாயிகள் இராணுவத்திடமோ, விசேட அதிரடிப்படையிடமோ சென்று வெடிகளை வாங்கலாம் எனினும் அனுமதி பெற்று வாங்கி வருவதற்குள் வயல்கள் நாசமாகிவிடும்.

பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பெய்த பெருமழையினால் நெல் நன்றாக நனைந்து விட்டது. இதனால் உடனடியாகவே நெல்லை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சில இடங்களில் வயலுடனேயே பயிர்கள் நாசமாகின. இன்னும் சில இடங்களில் மேல் படையிலிருந்த மண் அள்ளுண்டு சென்று விட்டது. வெறும் மணலே எஞ்சியிருக்கிறது. உன்னிச்சைப் பகுதியில் நனைந்த பயிர்கள் நீண்டநாட்கள் வயலில் கிடக்க வேண்டி ஏற்பட்டதால் யானைகளால் அழிக்கப்பட்டன.

6மணிக்குப் பின்னர் விவசாயிகள் வயலுக்குச் செல்ல அனுமதி இல்லை. இதனால் கால நீடிப்பு ஏற்படுகிறது. யுத்தத்தினாலும், இயற்கை அழிவுகளாலும் கிழக்கு விவசாயிகள் ஓட்டாண்டிகளாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய நிலை அகதிகள் தொகையை அதிகரிக்கச் செய்கின்றது. அகதிகள் முகாம்களில் வழங்கப்படும் உணவோ ஒருவன் சாகாமல் இருப்பதற்கு குறைந்தது எவ்வளவு தேவையோ அவ்வளவே வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் தமது குடிசைகளைத் திருத்துவதற்கு, அல்லது வேலி போடுவதற்கு, மரம் வெட்டுவதற்கு காட்டுக்குச் சென்றால் இராணுவத்தினால் உயிராப்பகதுண்டு.

மறுபுறம் ஒருசில அரசியல்வாதிகளுடன் சேர்ந்து கொண்டு இராணுவம் தேக்கு, முதிரை போன்ற விலை உயர்ந்த மரங்களை வெட்டி பதுங்கு குழிகள் அமைப்பதும், மரவியாபாரம் செய்வதும் நடைபெறுகிறது.

உள்ளூர் பத்திரிகைகள் இதனைப் பெரிதாகக் குறிப்பிடுவதில்லை. அச்சுறுத்தல் நிலவும் சூழல் காரணமாக இருக்கலாம். ஆனால் அரசியல்வாதிகளும், வியாபாரிகளும் பெருந்தொகைப் பணத்தை நீதிமன்றத்தில் தண்டமாகச் செலுத்தியுள்ளார்கள்.

மற்றைய பிரச்சினை வட-கிழக்குப் பகுதிக்கு உரம் கொண்டு போகப்படுவதை பாதுகாப்புப்படை தடைசெய்துள்ளது. (அது வெடிப்பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில்) நவீன இரசாயன உரம் இல்லாவிட்டாலும் இயற்கை உரத்தை பாவிக்கலாம் அவை சிறந்தவை என அரசு கூறுகிறது. சிறந்தவைதான் சந்தேகமில்லை. ஆனால் கிழக்கின் தேவையைக் கருத்திற கெடுத்துப் பார்க்கும்போது 10சத விகிதம் கூட போதியதில்லை.

மீனவர்களைப் பொறுத்தவரை 3 மைல்களுக்கப்பால் மீன் பிடிக்க முடியாது. இரவில் கடலுக்குச் செல்லத்தடை. இதனால் மீன் விலை ஏறியுள்ளது. சிறுவர்களுக்கு புரதக் குறைபாட்டினால் உண்டாகும் நோய்கள் அதிகரித்துள்ளன.

– சிந்தன்

## நண்பர்கள் யார் பகைவர்கள் யார்?

– அஷ்ரஃப் –

வட-கிழக்கு இணைப்பைத் துண்டித்தால் தமிழர்களுக்கோ, முஸ்லீம்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. மாறாக பெரும் கஷ்டங்களே ஏற்படும் என 02-04-94இல் கல்முனையில் நடைபெற்ற முஸ்லீம் காங்கிரஸ் மாநாட்டில் அதன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் தெரிவித்தார்.

இதேபோல் பிரபாகரனுக்கு எழுதிய பகிரங்க கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

ஒருகாலத்தில் வட-கிழக்கு பிரச்சினை பேசப்பட்டபோது சிங்கள பேரினவாத தலைமைத்துவம் தமிழ்த் தலைவர்களுடன் மாத்திரம் பேசியது. ஆனால் இன்று நிலமை மாறிவிட்டது.தமிழ்த் தலைமைத்துவத்துடனும் முஸ்லீம் தலைமைத்துவத்துடனும் அவர்கள் பேசவேண்டும். ஆனால் இரு சமூகங்களிடமும் ஒருபோதும் கூட்டாக ஒரு நாக்கால் பேச மாட்டார்கள்.

தமிழர்களுடன் பேசும்போது உங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் என்ன செய்வது முஸ்லீம்கள் இதற்கு இணங்கமாட்டார்களே என்பார்கள். முஸ்லீம்களுடன் பேசும்போது உங்கள் தனித்துவம் பாதுகாக்கப்படுவது அவசியம்தான் ஆனால் முஸ்லீம்களுக்கு அதிகாரப் பங்கீடு செய்யப்படுவதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே என்பார்கள். அதுமட்டுமல்ல சிங்களவர்களும் முஸ்லீம்களும் சேர்ந்து கிழக்கிலே தமிழர்களை ஆட்டிப்படைப போமே முஸ்லீம் ஒருவரை முதலமைச்சர் ஆக்குவோம் என்று ஆசைவார்த்தையும் கூறுவார்கள். முஸ்லீம்களையும், தமிழர்களையும் மூட்டியும் வைப்பார்கள்.

இந்த வரலாற்றுப்போக்கை மாற்ற வேண்டுமானால் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் மத்தியில் ஒருமித்த சிந்தனைப் போக்கு ஏற்பட வேண்டும்.

முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள், அனர்த்தங்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. அவற்றிற்கு எவ்வளவு தூரம் நீங்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருந்தீர்கள் என்பதை என்னால் கூறமுடியாது. இருப்பினும் கூட முஸ்லீம் சமூகத்திற்கு புலிகள் செய்த தவறுகளுக்காக பகிரங்க மன்னிப்புக் கேட்கும் கடமை இருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். முஸ்லீம்களின் இழப்புகளுக்கு நஷ்டஈட்டையும், வடக்கிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லீம்களை நஷ்டஈட்டுடன் மீளக்குடியமர்த்த வேண்டும் என்பதையும் நீங்கள் பகிரங்க நிலைப்பாடாக வெளிப்படுத்த வேண்டும்.



www.padippakam.com

# மேதின அறைகூவல்

...தொழிலாளி வர்க்கம் தனது ...த்தத்தில் தோய்ந்த கொடி...ளை உயர்த்தி எட்டுமணிநேர வேலை என்ற உரிமை பெற்ற ...னம்.

...ன்று இலங்கையில் வட–...க்கு மக்களின் அன்றாட ...வனோபாயத்திற்கான ...தொழில் உரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் கடலுக்குச் செல்வதும், விவசாயிகள் வயலுக்குச் செல்வதும் அரசும் இராணுவமும் தீர்மானிக்கும் விடயங்களாகிவிட்டன. நாட்டில் தேசிய இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்ததன் பின் அப்பிரச்சினைக்கான தீர்வாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை அழிக்கும் யுத்தத்தையே முன்வைத்துள்ளது. வட–கிழக்கிலும் தெற்கிலும் தமிழ் முஸ்லீம் மக்களின் அகதி முகாம்கள் நிறைந்துள்ளன.

மலையக தோட்டங்களை அந்நிய தோட்ட கம்பனிகளுக்கு அடகு வைத்ததன் மூலம் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை இந்த அரசு வீதிக்கு விரட்டியுள்ளது. வேலை நாட்களைக் குறைத்து தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கியுள்ளது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான தொழிற்சங்க உரிமை பறிக்கப்பட்டு அவசரகாலச் சட்டத்தின்கீழ் பேயாட்சி நடைபெறுகிறது. வெளிநாட்டுப் பொருட்களால் சந்தையை நிறைத்து கவர்ச்சி காட்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு மக்கள் மூன்று நேரம் பான உட்கொள்வதையே சிரமமாக்கியுள்ளது.

சிறைக்கூடங்களும், மரணங்களும் அகதிமுகாம்களும் பட்டினியும் மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சியின் 17வருட ஆட்சியில் எஞ்சியிருக்கின்றன. எனவே சுரண்டலுக்கெதிரான, இன அடக்குமுறைக்கு எதிரான முற்போக்கு சக்திகள் அணிதிரண்டு போராட இம்மேதினத்தில் திடசங்கற்பம் பூணுவோமாக! ❑

## பனிச்சங்கேணியில் படையினர் தாக்குதல்

18.04.94 வாகரை பனிச்சங்கேணிப் பகுதியில் புலிகள் வைத்த கண்ணிவெடியில் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்த இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தின் பழிதீர்க்கும் படலம் ஆரம்பமானது. உடனடியாகவே அவ்விடத்திலிருந்த 35 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு வீட்டினுள் வயோதிபர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார். 7 பேர் தீக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலுள்ள இராணுவ முகாம் அதிகாரிகளோ அவர்கள் வாகரையிலிருந்து வெலிக்கந்தைக்குச் சென்று கொண்டிருந்தவர்கள் தமது கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள் ஆனால் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்திருக்கிறோம் என்கிறார்கள்.

அகதிகளான குடும்பங்கள் வாகரை முருகன் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர். இது பற்றி இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்து ஆச்சரியமூட்டுவதாக உள்ளது. சித்தசுவாதீனமான இராணுவ வீரர் ஒருவரே இத்தனை காரியங்களை செய்ததாகவும் அவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் ஜனநாயகம் மலர்கிறது. அதுவும் கீழ் மட்டத்தில் மலர்கிறது என்று உலகுக்கு விளம்பரம் செய்யும் அரசின் படைகளோ புலிகளின் செயலுக்காக மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் மீண்டும் இறங்கியுள்ளன.

இது மக்களை புலிகளின் பின்னால் தள்ளிவிடும் ஒரு செயலாகும். உள்ளூராட்சித் தேர்தலில் ஒத்துழைப்பு வழங்காத கிழக்கு மக்களை அரசு பழிவாங்குகிறதா என்ற சந்தேகமும் கூடவே எழுகிறது.

மகாவலி சி வலயத்தின் கீழ் வரும் இப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்த அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் இங்கு பல்வேறு இடையூறுகள் தடைகளுக்கு மத்தியில் அகதிகளான தமிழ் மக்கள் மீள்குடியேற்றப்பட்டார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் புலிகளின் இராணுவத்தினர் மீதான தாக்குதல் அரசின் நோக்கங்களுக்கு சாதகமாக்வே அமைந்துள்ளது. ❑

## கண்விழித்தல் போராட்டம்.

நிலக்கரிச்சுரங்கங்களை மூடியும், எரிவாயு மின்சாரம் ஆகிய வீட்டுப்பாவனைக்கான எரிபொருட்கள் மீது வரிகளை உயர்த்தியும் சாதாரண தொழிலாளர்கள் மீது பெரும் பொருளாதார சுமைகளை ஏற்றும் பிரிட்டிஸ் அரசின் செயற்பாடுகளைக் கண்டித்தும் லண்டன் டவுனிங் வீதியிலுள்ள பிரதமரின் இல்லத்திற்கு முன்னால் டிசம்பர் 21ம் திகதி காலை 8 மணியிலிருந்து 22ம் திகதி காலை 8 மணிவரை கண்விழித்தல் போராட்டத்தை சுரங்கத் தொழிலாளர்களும் வயோதிபர் சங்கங்களும் முன்நின்று நடத்தின. பாராளுமன்ற உறுப்பினர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் இப்போராட்டத்தில் பங்குபற்றி தமது ஆதரவைத் தெரிவித்தனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் லண்டன் கிளைத் தோழர்களும் இப்போராட்டத்தில் பங்குபற்றினர்.





## புளொட்...

தனது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்று கூறப்படுபவற்றில் கொள்ளை, கொலை, ஆட்கடத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் மக்கள் விரோத சக்திகள் ஆட்டம் போடுகின்றன. இத்தகைய சக்திகளுக்கு ஆயுதம் மற்றும் வசதிகளை அரசே செய்து கொடுப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இதற்கிடையில் புளொட் தலைவர் சித்தார்த்தன் மன்னாரில் கொள்ளையில் ஈடுபட்ட குழு புளொட் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றது. அதற்கும் புளொட்டிற்கும் சம்பந்தமில்லை என்று கூறியிருக்கிறார். அப்படியானால் மன்னாரில் உள்ள புளொட் இயக்கத்தினர் ஏன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழரை தாக்கினார்கள் என்பது புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

தவிர எந்த ஒரு இயக்கமும் தவறிழைக்கும்போது அதனைப் பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதும் ஜனநாயக உரிமையாகும். அதனை யாரும் பறித்துவிட முடியாது என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஜனநாயகம் மனித உரிமைகள் பற்றிய கருத்துக்கள் வலுவடைந்து வரும் வேளையில் இத்தகைய அராஜகப் போக்குகள் மீண்டும் தலைதூக்குவது ஒரு துற்சகுனமாகவே தெரிகிறது. இப் போக்குகளுக்கு எதிராக ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து குரல்கொடுக்க வேண்டும் ❑

## குறுக்கெழுத்துப் போட்டி–4



### இடமிருந்து வலம்

1.உலகம் வேறு பெயரில் நிற்கிறது.
7.இந்த விமானத்தில்தான் இலங்கை வேந்தன் சீதையைக் கடத்தினாராம்.
15.விசுவாமித்திரர் புரிந்ததும் மேனகை கெடுத்ததும்.
23.அடங்காப்பற்று மன்னனின் பின் பகுதி குழம்பிக் கிடக்கிறது.
31. நால்வகைப் படைகளில் ஒன்று.
34.புன்மைக்கு ஏனிந்தப் புன்மை.
38.இங்கே முதலையைப் பிடியுங்கள்.
47.இரவினில் ஆட்டம் .....இனில் தூக்கம் இதுதான் கவியரசரின் உலகம்.
53.இதற்கு முன்னால் "இளசு"களின் கூட்டம்.
61.திறந்து கொண்டு உள்ளே போங்கள் அல்லது தட்டுங்கள் திறக்கப்படும்.
74.நீருயர இது உயரும்.
77.தமிழ் பேசும் மக்களுக்கு இதுவே குழப்பம்.
81.விரும்பியபடி அடியுங்கள்.
87.அண்மையில் கபில்தேவ் வீழ்த்திய 432 விக்கட் ஏற்படுத்திய சாதனை.
94.தோன்றில் இதனுடன் தோன்றுக–அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று.
98.பதம் குழம்பிவிட்டது.


### மேலிருந்து கீழ்

1.1972இல் கொண்டு வரப்பட்ட இந்த அரசியல் அமைப்பமைத் தந்தை செல்வா தீயிட்டுக் கொளுத்தினார்.
3.காலனித்துவ காலத்திலிருந்து இன்றுவரை மலையகப் பாட்டாளிகளின் உறைவிடம்.
5.தலைகீழான தூய்மை.
7.சும்மா வம்பு செய்யாதே.
10.சகுந்தலை இதனைத் தொலைத்ததால் சாகுந்தலம் உருவானது.
16.பெண்ணிடமில்லாத ஒன்று ஆணிடமிருக்கிறது.
38. பண்டைத்தமிழரின் காதல் ஒழுக்கம் இவ்வாறு கூறப்படும்.
39.இளமையில் இதனைச் செய்.
53.இது தன் இணையைத் தேடுகிறது.
56.இதுமூலமும் நதிமூலமும் அறியமுடியாது.
60.நால்வகைப் படைகளில் இதுவும் ஒன்று.
61.உப்பில்லாத இது குப்பையிலே கிடக்கிறது.
74.ஒரு கோல்.
77.உயிர்களுக்கு ..... வைப்பதில் பிரபாகரன் நிபுணர் (மாறியுள்ளது).
78.ஆலயம்.
79.உலோகப் பொருள் ஒன்று நெழிந்துள்ளது.

### போட்டி– 3ல் பரிசு பெறுவோர்

1. ச. அகில்ராணி, புகைவிரத நிலையவீதி, வவுனியா
2. கு. சகாதேவன், 4ஆம் குறிச்சி, ஏறாவூர்
3. சி. சிந்துஜா, தாம்பரம், சென்னை

### குறுக்கெழுத்துப் போட்டி–3 விடை



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் பத்மநாபா ஞாபகார்த்த உரை

ஹோட்டல் தப்ரபேனில் 20.04.94 அன்று பத்மநாபா மன்றத்தினால் பத்மநாபா ஞாபகார்த்தச் சொற்பொழிவு நடாத்தப்பட்டது.

இதில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், தெற்கு, தென்கிழக்காசிய கல்வி மையத்தின் தலைவருமான சூரியநாராயணன் அவர்களும், கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியரும், இலங்கையின் முற்போக்கு புத்திஜீவியுமாகிய ஜெயதேவ உயாங்கொட அவர்களும் உரையாற்றினர். பத்மநாபா மன்றத்தின் சார்பில் தோழர் சிந்தன் டி சில்வா வரவேற்புரை நிகழ்த்தினார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல்பீட உறுப்பினரும் உத்தியோகபூர்வ பேச்சாளருமான தோழர் கேதீஸ்வரன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய உதவி ஸ்தானிகர் செரி ஜோர்ஜ், வட-கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்ணான்டோ, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் சிவசிதம்பரம், இந்து கலாச்சார ராஜாங்க அமைச்சர் பி.தேவராஜ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கே.பி.சில்வா, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், சர்வோதய இயக்கத்தலைவர் ஆரியரட்னா ஆகியோருடன் மற்றும் கல்விமான்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் தொழிற்சங்கவாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தோழர் நாபாவின் அபிமானிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர்.

கலாநிதி ஜெயதேவ் உயாங்கொட உரையாற்றும்போது தோழர் பத்மநாபா அவர்களுடன் தனிப்பட்ட முறையில் ஓரளவுதான் பரிச்சயம் உண்டு எனினும் அவர் எனது தலைமுறையைச் சேர்ந்த புரட்சியாளர் என்ற அடிப்படையில் அவர் மீது எனக்கு அபிமானம் உள்ளது என்றும், அவரைப்போன்ற தலைவர்கள் இந்தத் தலைமுறையில் மிக அரிதாகவே காணப்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அவர் சோஷலிஸவாதியாகவும், மனிதாபிமானியாகவும், சர்வதேசியவாதியாகவும் திகழ்ந்தார்.

இவை எமது இன்றைய தேடல்களாக இருப்பதால் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக தேசியவாத கருத்துக்கள் இலங்கை அரசியலில் மேலோங்கி இருக்கையில் இவர் வேறுபட்ட மனிதராக இருந்தார்.





பேராசிரியர் சூரியநாராயணன் உரையாற்றும்போது திரு பத்மநாபா அவர்கள் இந்தப் பிராந்தியத்தில் இருந்த ஒரு தலைசிறந்த புரட்சியாளர் என்று குறிப்பிட்டார்.

முதன் முதலில் 1983இல் கண்டியில் அவரைச் சந்தித்ததாகவும் பின்னர் சென்னையில் தொடர்பை தொடர்ந்து பேணி வந்ததாகவும் குறிப்பிட்டார். சில கருத்துவேறுபாடுகள் இருந்த போதும் எமது நட்பை எப்போதும் பராமரித்தோம். தனிநபர் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அவருடைய இழப்பு அவருடைய மக்களுக்கு மாத்திரமல்ல, தனிப்பட்ட முறையில் எங்களுக்கு பேரிழப்பாகும்.

பின்னர் அவருடைய உரையின் பிரதான விடயத்திற்குச் சென்றார். இந்தியாவில் தலைதூக்கிவரும் மதவாத இனவாத சக்திகள் பற்றியும், இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் மத அடிப்படைவாத சக்திகளின் ஆபத்தான வளர்ச்சி பற்றியும், விபரமாக எடுத்துரைத்தார். புலிகள் இயக்கத்தை ஒரு "பொல்பொட்டிஸ" குழு என வர்ணித்தார்.

நன்றியுரையாற்றிய தோழர் கேதீஸ் மிகப்பெரிய வேலைப்பளு சிரமங்களுக்கு மத்தியில் பேராசிரியர் (
நாராயணன் அவர்கள் கருத்தர
பங்குபற்றியமைக்கு நன்றி தெரிவி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை
னணி இந்திய-இலங்கை ஒப்பந்த ஏற்று செயற்பட்டபோது பல்வேறு பேரினவாத குறுந்தேசியவெறிச் சக்திகள் அதற்கெதிராக கூக்குரலிட்டபோது கலாநிதி உயங்கொட அதற்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்பதனையும் குறிப்பிட்டார்.

தோழர் பத்மநாபா சூரியநாராயணன் அவர்களுடன் ஒரு புத்திஜீவி என்பதற்காக தொடர்பு கொண்டிருக்கவில்லை. சமூகத்தின் அடித்தட்டில் உழலும் மக்கள் மீது ஆர்வம் கொண்டவர் என்ற ரீதியிலும் குறிப்பாக மலையகத் தொழிலாளர்களின்பால், இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டோரின் பிரச்சினைகளில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார் என்ற ரீதியிலுமே அவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது.

இந்த ஞாபகார்த்த சொற்பொழிவு உணர்த்துவது என்னவென்றால் புலிகள் இய்க்கம் தனது துப்பாக்கிச் சன்னங்கள் மூலம் தோழர் பத்மநாபாவின் கருத்துக்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவதை தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதையே. ❑



## மரண உயிர்ப்பு

நிகழ்காலத் தொட்டிலின்
நித்ரா சிசுக்களாக
கல்லறைச் சுவர்களையே
கருவறை மெத்தைகள் ஆக்கி;
சூனியப்பட்டுப் போன
ஜட வாழ்க்கையில்
மௌனமாய் சிரித்து
முகாரியாய்ப் பாடி.....
அச்சத்தால் நிர்ப்பந்தித்து
மரணத்தால் உயிர்த்து
பகல்களால் தூங்கி
பாடைகளால் எழுந்து
மனசுகளின் இடுக்களில்
மயானக் கவ்வல்களாக.....
சாவு மட்டும் தான் தினமும்
நடக்கிறது
வானொலிச் செய்தி அறிக்கை
மாதிரி
நிலாக் காலமும் அமாவாசை தான்
ஏகாதிபத்தியத்தின் முன்
எல்லாமே இருள் தானே
சமாதானம், அமைதி
பேச்சுவார்த்தை, தீர்வு
உடன்படிக்கை, குழுக்கள்.....
நிற்க மறுக்கும் நிலவு போலே
எங்கள் விரல்களே
கண்களைக் குத்தி
காயப்படுத்தும் போது.....
இமைகள் ஒன்றும்
துரோகிக்கவில்லை
நாங்களும் சிரிக்கின்றோம்
அழுகையின் பீலிக்குள் நின்று.

- ரீ.எல்.ஜவ்பார்.

"இரணங்கள்" கவிதைத் தொகுப்பிலிருந்து

## தந்தை செல்வா நினைவு தினம் ஏப்ரல் 26

ஈழத் தமிழினத்தின் எழுச்சியின் வடிவம் ஈழத்துக் காந்தி என அழைக்கப்பட்ட தந்தை செல்வா அவர்கள் மறைந்து 18 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இக்காலப்பகுதியில் தமிழினம் சந்தித்த சோதனை, வேதனை எத்தனை! எத்தனை!!.

1950களின் முற்பகுதியில் வடகிழக்கு மக்களுக்கு சமஷ்டி அமைப்பையும், மலையக மக்களின் வாக்குரிமை, பிரஜா உரிமையையும் வலியுறுத்தி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

மாறிமாறி பதவிக்கு வந்த சிங்களக் கட்சிகளிடம் தந்தை செல்வாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டன. அவர் பண்டாரநாயக்காவுடனும், டட்லியுடனும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் சிங்கள இனவாதிகளினால் கிழித்தெறியப்பட்டன. தமிழ் மக்களுக்கு சிங்கள அரசியல் தலைமைகள் இழைத்த துரோகத்துக்கு இவ் ஒப்பந்தங்கள் வரலாற்றுப்பாடமாக அமைகின்றன.

தந்தை செல்வா தலைமையில் 1960களின் முற்பகுதியில் வட-கிழக்கு பூராவுமே சத்தியாக்கிரக இயக்கம் வெகுஜன இயக்கமாக எழுந்தது.

1972 அரசியல் அமைப்பிற்கெதிராக தந்தை செல்வாவின் தலைமையில் சத்தியாக்கிரக இயக்கங்கள் நடத்தப்பட்டன. அரசியலமைப்பை தீயிட்டுக் கொளுத்தியதாக அவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை தமிழ் தேசிய் விடுதலையின்பால் ஈர்த்த காந்தசக்தி அவரிடமிருந்தது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

32. மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை. கொழும்பு-7 க.பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்